தென்னாற்காடு மாவட்டம் கடலூர் மஞ்சக்குப்பம் புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளியில், பள்ளி நிர்வாகியின் மீது புகார்கள் கூறி மாணவர்கள் நடத்தும் கிளர்ச்சி குறித்து. 193

1981 மார்ச் 24]

** திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :* ஒரு நல்ல குறிப்பு மாண்புமிகு கல்வி அமைச்சரது அறிக்கையிலே இருக்கிறது. தாளாளர் பள்ளிக்கூடத்திற்கு என்று அமைக்கப்பட்ட பணியாளர் குழுவையே ரத்து செய்து விட்டதாக மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அறிவித்திருக்கிறார். ஆனால் அவர் அப்படி ரத்து செய்ததற்கான காரணத்தைச் சொல்லவில்லை. இதுபற்றி மாவட்டக் கல்வி அதிகாரி நிர்வாகத்திடம் "ஏன் ரத்து செய்திருக்கிறீர்கள்?" என்று விளக்கம் கேட்டிருக்கிறார். அவர் அதற்கு எந்தவித பதிலும் சொல்லவில்லை. அதுபற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. கல்வித் துறையை அந்த நிர்வாகம் கொஞ்சம் கூட மதிக்கவில்லை என்பதைத்தான் இது தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. மைனாரிட்டி நிர்வாகத்தில் இருப்பவர்கள் எல்லாம் இம் மாதிரி நடந்துகொள்கிறார்கள். வக்ப் போர்டில் ஒரு அமைப்பு ஏற்படுத்தி யிருப்பது மாதிரி இம்மாதிரி சிறுபான்மை நிர்வாகங்களை ஒரு அமைப்பின் கீழ் கொண்டு வந்து கட்டுப்படுத்த அரசு முன்வருமா? அப்படி ஒரு அமைப்பை ஏற்படுத்தினால், இம்மாதிரி தவறு செய்யும்போது அல்லது பிரச் சினைகள் வரும்போது, உடனடியாக அரசு தலையிட்டு நிவாரணம் காண ஏதுவாக இருக்கும் என்பதால் இதுபற்றிப் பரிசிலனை செய்யப்படுமா?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பெரிய அளவிலே பரிசிலனை செய்வதற்கு நிறைய செய்திகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்திருக் கிறார்கள். கல்வித் துறையைப் பொறுத்தவரையில், கல்வித் துறையின் விதி களுக்கு உட்பட்டு அதிகாரிகள் அந்த நிர்வாகத்தினரை யார் என்று பார்க்காமல் உரிய நடவடிக்கை எடுத்து அந்தப் பள்ளிக்கூடம் சிறந்த முறையிலே நடை பெற முயற்சி எடுப்பார்கள்.

(2) மதுரை சட்டக் கல்லூரியில் போதிய ஆசிரியர்கள் இல்லாமையாலும் மாணவர் இல்ல வசதி இல்லாமையாலும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

மதுரை சட்டக் கல்லூரியில் போதிய ஆசிரியர்கள் இல்லாமையாலும் மாணவர் இல்ல வசதியும் ஏனைய வசதிகளும் போதிய அளவு இல்லாமையாலும் அம் மாணவர்கள் தங்களுடைய கல்வியை தொடர்வதில் ஏற்பட்டுள்ள இன்னல், இடர்பாடுகள் குறித்து

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

194 மதுரை சட்டக் கல்லூரியில் போதிய ஆசிரியர்கள் இல்லாமையாலும் மாணவர்கள் இல்ல வசதி இல்லாமையாலும், மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து.

[1981 மார்ச் 24

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விவர அறிக்கை@ ஒன்று அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியிலே கல்வி பயின்றுவரும் மாணவர்கள் தங்களுக்குப் போதிய ஆசிரியர்கள் இல்லாததால் தொடர்ந்து வகுப்புகளிலே கல்வியைப் பெற முடியாத நிலையிலே தங்களுடைய இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்கிறார்கள். மேலும், அங்கு போதிய சிற்றுண்டிச்சாலை இல்லை என்றும் சொல்கிறார்கள். விவர அறிக்கையிலே திட்டவட்டமாக போதுமான ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள் என்ற விவரம் இல்லை. உடனடியாக தேவையான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்குத் தொடர்ந்து பாடம் நடத்தும் அளவிலே அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : போதுமான ஆசிரியர்கள் இல்லை என்ற காரணத்தால், இப்போது உடனடியாக அந்தப் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய சட்டக் கல்வித் துறை இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார். நீண்டகாலமாக இப்படிப்பட்ட குறைபாடுகள் இருப்பதற்கு என்ன காரணம் என்பதுபற்றி விளக்கம் கேட்கப்படும்.

திரு. பா. ரா. தாமஸ் : பெண்கள் தங்கி சட்டம் படிப்பதற்கு மதுரை மீனாட்சி அரசு கலைக் கல்லூரி வளாகத்திலேயே ஒரு தங்கும் விடுதி கட்டுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். மாநிலத்திலேயே மிகவும் சிறப்பாக நடைபெறுவது மதுரை மீனாட்சி மகளிர் அரசினர் கலைக் கல்லூரி. அதிகமான அளவிலே முதுகலைப் பட்டம் கொடுக்கும் அளவிலே அந்தக் கல்லூரி இருக்கிறது. ஆகவே, அங்கே சட்டக் கல்லூரி மாணவியர்களுக்கான விடுதி அமைப்பதைவிட தனியாக வேறொரு இடத்திலே அமைத்தால், அந்தக் கல்லூரியின் வளர்ச்சி பாதிக்கப்படாது. மேலும், அங்கே சட்டக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு இப்போது உதவித் தொகை பெற முடியாத நிலையும் இருக்கிறது. இந்த ஆண்டுக்குள்ளாக சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு தங்கிப் படிக்கும் வசதியும் ஏற்படுத்தி, அவர்கள் கல்லூரிக்குச் செல்ல வாகன வசதியும் ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

@ 248 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இடம் கிடைத்ததற்குப் பிறகு கட்டிடம் கட்டப்படும். மதுரை மீனாட்சி மாணவியர் அரசினர் கலைக் கல்லூரியின் வளாகத்திற்குள் மகளிருக்குத் தங்கும் விடுதி கட்டுவதிலே தவறு இல்லை. அங்கே கட்டுவதால் அவர்களுக்கும் ஒரு பாதுகாப்பு இருக்கும். அங்கிருக்கும் பெண்களுக்கும் துணையாக இருக்கும். கல்விச் சூழ்நிலையும் நன்றாகத்தான் இருக்கும்.

3. 1981-82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

***திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவர் அவர்களே. 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைக் கொடுத்திருக்கிற ஆட்சி, எந்த அள விற்குத் தாங்கள் அளித்திருக்கிற வாக்குறுதிகளை, மிக்க அழகாகத் தீட்டி யிருக்கிற ஓவியத்தை நிறைவேற்றப் போகிறார்கள் என்ற சந்தேகத்தை யல்ல, இவர்களாலே நிறைவேற்ற முடியாத நிலையிலே இருக்கிறார்கள் என் பதை நான் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை அளித்தபோது நிதிநிலை அறிக்கையின் விளைவாக ஏற்பட்ட பற்றாக்குறை என்று சுட்டிக்காட்டியது 9.57 கோடி ரூபாய். கடைசிவரையிலே அந்த நிதிநிலை அறிக்கையிலே விழுந்து துண்டு ஈடுகட்டப்படவில்லை. அந்த நிதிநிலை அறிக்கையிலே எந்த அளவிற்கு பற்றாக்குறை என்று சொன்னார்களோ அது நிறைவுபடுத்தப்படவில்லை. அந்த நிலையிலேதான் 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே 122.96 கோடி ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது. 9 கோடி ரூபாயை ஓராண்டு காலத்திற்குள்ளே ஈடுகட்டி, தங்களுடைய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத ஒரு அரசு இந்த ஆண்டிலே மீண்டும் ஒரு நிதிநிலை அறிக்கை தருகிறது. அந்த நிதிநிலை அறிக்கையிலே 122.96 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இந்த நிலைமையிலே 'நாங்கள் பல்வேறு புதிய திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறோம்' என்று விவாமாக அறிக்கை வேறு கொடுத் திருக்கிறார்கள். அவற்றை எப்படி நிறைவேற்றப் போகிறார்கள்? எங்கே நிதி இருக்கிறது? இந்த அரசு முன்னேற்றத்திற்குத் தேவைப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடாமல் விநோதமாக விளம்பரங்களுக்குச் செலவிடுகிறது. நாட்டினுடைய வருவாயை, இந்த நாட்டினுடைய ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கின்ற வளர்ச்சித் திட்டங்களிலே அதிக அக்கறை கொண்டு இன்றும், எதிர்காலத்திலும் மக்களை வாழ வைக்க வேண்டிய

நிதிநிலை அறிக்கையைத் தரவேண்டிய அரசினர், இன்றைக்குத் துண்டு விழுகிற நிதிநிலை அறிக்கை தந்திருப்பதோடு மட்டுமல்லாமல், நாட்டிற்கான வளர்ச்சித் திட்டங்களை தங்களாலே நிறைவேற்ற முடியாது என்ற நிலைமையையும் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், 100 கோடி ரூபாய் செலவில் காகித ஆலை தொடங்கப் போகிறோம் என்று சொன்னார்கள். ஆட்சிக்கு வந்த நாளிலேயிருந்து "காகித ஆலையை இந்த அரசு துவங்க இருக்கிறது. காகித ஆலையை இந்த அரசு துவங்க இருக்கிறது", என்ற தகவல் வந்துகொண்டிருக்கிறதே தவிர, அந்தக் காகித ஆலை துவங்கப்படவில்லை. அதற்கான நிதியொதுக்கீடு இந்த ஆண்டு 27 கோடி ரூபாய். இந்த ஆட்சி செய்கின்ற உறுதியான திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், அப்படி எதுவும் இல்லை. அதோடு மட்டுமல்ல (expected revenue) என்ற அளவிலே புதிய வரி விதிப்புகள் மூலமாக இந்த அரசு எதிர்பார்க்கும் வருவாய் ரூபாய் 20 கோடி. 122 கோடி ரூபாய் துண்டு விழுகின்ற ஒரு நிதிநிலை அறிக்கையிலே இந்த ஆட்சி புதிய வரி விதிப்புகள் மூலமாக எதிர்பார்க்கும் வருவாய் 20 கோடி ரூபாய் தான் என்ற நிலை ஏற்படும்போது, மீதியிருக்கும் பற்றாக் குறையை எப்படி ஈடு கட்டப் போகிறார்கள்? ஈடு கட்டவில்லை என்று சொன்னால், சரிப்படுத்தவில்லை என்று சொன்னால், எப்படி அரசினுடைய புதிய திட்டங்களை செயல்படுத்தப் போகிறார்கள்? அதற்கான விளக்கங்கள் தர வேண்டாமா? பக்கங்கள் இருக்கின்றன, காகிதங்கள் இருக்கின்றன என்று வெறும் திட்டங்களை மட்டும் எழுதி வைத்தால், அவற்றை எப்படி, எப்போது நிறைவேற்றப்போகிறார்கள் என்று அரசு எங்களுக்கு பதில் சொல்ல வேண்டாமா என்று கேட்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், இங்கே பேசுகின்றவர்கள் பல பேர் மத்திய ஆட்சி ஏதோ கையிலே பணத்தை இறுக்கி மூடி வைத்துக்கொண்டு இவர்களுக்குக் கொடுக்காததைப்போலவும் ஏதோ அங்கே ஒரு எதிரிகள் ஆட்சி இருப்பதைப் போலவும், இங்குள்ள எல்லா நிலைமைகளையும் மாநில அரசே சமாளித்துக்கொண்டிருப்பதைப் போலவும் ஒரு வர்ணத்தைத் திட்டிக்கொண்டிருக்கிறார்கள். 7-வது (Finance Commission) சிபார்சு அடிப்படையிலே, ஏற்கெனவே எக்சைஸ் வரிவிதிப்பு மூலமாக மத்திய அரசு 20 சதவிதம் தான மாநிலங்களுக்கு முன்பு கொடுத்தது. 1979-80-லே மத்திய அரசு 20 சதவிதம் என்று இருந்ததை 40 சதவிதம் என்று ஆக்கி ஏற்கெனவே 91 கோடி ரூபாய் பெற்ற இந்த மாநிலத் திற்கு 192 கோடி ரூபாய் என்று அதிக நிதியுதவியை ஒதுக்கித் தந்திருக்கி றார்கள். இன்னும் சொல்லப்போனால் இந்தியா முழுவதும் இருக்கிற பல்வேறு